# தேசபக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர்: G. ராஜா 9842364068 இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 110 ★ 21.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:110 ★21.08.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


# காவிரி விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை பின்பற்ற வேண்டும்

## முதல்வர் விஜய் வலியுறுத்தல்

முதல் மந்திரிகள் மாநாடு

மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் மத்திய மந்திரி அமித்ஷா தலைமையில் 31வது தென் மாநில முதல்மந்திரிகள் மாநாடு சென்னை மாமல்லபுரத்தை அடுத்துள்ள கோவளத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது.

இதில் முதல்அமைச்சர் விஜய், கர்நாடக முதல் மந்திரி டி.கே. சிவக்குமார், ஆந்திர முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு, தெலுங்கானா துணை முதல்மந்திரி மல்லுப்பட்டி விக் ரமர்கா, கேரளம் முதல்மந்திரி சதீசன், புதுச்சேரி மாநில கவர்னர் கைலாஷ்நாதன், அந்தமான்நிக்கோபர்தீவுகள் துணை நிலை கவர்னர், லட்சத்தீவு அதிகாரிகள் மற்றும் அந்தந்த மாநில உயர்அ திகாரிகள் பங்கேற்றனர். மாநாடு நிறைவில் முதல்அ மைச்சர் விஜய் பேசியதாவது:

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்ஜினாக தென்மாநிலங்கள் உள்ளன. நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் தென்மாநிலங்களின் பங்கு 30 சதவீதம். நாட்டின் வளர்ச்சியில் மத்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம்.

காவிரி விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை பின்பற்ற வேண்டும். காவிரி மேலாண்மை ஆணைய முடிவுகளை செயல்படுத்த வேண்டும். தமிழகத்தின் நதிநீர் உரிமையை பாதுகாக்க வேண்டும். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு வேண்டும். மருத்துவப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வால் கிராமப்புற, ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். 12ம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டும் மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்த வேண்டும். பெங்களூரு மெட்ரோவை ஓசூர் வரை நீட்டிக்க வேண்டும். இது சிறந்த உள்கட்டமைப்பாக இருக்கும். ஆன்லைன் மருந்து விற்பனையை ஒழுங்குபடுத்த வேண்டும். தென் மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையக்கூடாது. நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையாது என சட்டப்பூர்வ உறுதியளிக்க வேண்டும். மக்கள்தொகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததற்காக தென் மாநிலங்கள் லத்தின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். மாநிலங்களின் நிதி தன்னாட்சியைமதிக்கவேண்டும். தமிழ்நாட்டுக்கு நியாயமானநிதிப் பகிர்வு அளிக்க வேண்டும்.

மாநிலங்களின் செயல்திறன், வளர்ச்சி வேண்டும். ஜிஎஸ்டி வரம்புகளைத் தீர்மானிக்கும் நெகிழ்வுத்தன்மையை மாநிலங்கள் மீண்டும் பெற வேண்டும். போதை பொருட்களை தடுக்க மாநிலங்களுக்கு இடையே கூட்டமைப்பு தேவை.




பிரதிநிதித்துவத்தை இழக்கக்கூடாது.

முல்லைப் பெரியாறு நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த நீதித்துறை உத்தரவுப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைமடை மாநிமுதலீடுகளை கருத்தில் கொண்டு நியாயமான நிதிப்பகிர்வை வழங்க வேண்டும்.

தென்மாநிலங்களை இணைக்கும் வகையில் ஒருங்கிணைந்த தொழிற்பேட்டைகளைஅமைக்க கடல்வழிப் போக்குவரத்து, மீன்பிடித்தலில் அண்டை மாநிலங்களுடன் இணைந்து செயல்படுவோம். சகோதர மாநிலங்களுடன் இணைந்து பணியாற்றுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

# "சொந்த வீடு கனவை நனவாக்கும் தமிழக வீட்டுவசதி வாரியம்"

## ஆன்லைனில் சுலபமாக விண்ணப்பித்து பலன் பெற எளிய வழிமுறைகள்

தமிழகத்தில் சொந்தமாக வீடு, மனை அல்லது கடை வாங்க வேண்டும் என்பது ஒவ்வொரு சாமானிய மனிதனின் வாழ்நாள் கனவாக உள்ளது. இத்தகைய கனவை நனவாக்கும் நோக்கில், ராகவும் இருப்பது அவசியமாகும். மேலும், விண்ணப்பதாரர் அல்லது அவரது குடும்பத்தினர் பெயரில் ஏற்கனவே வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகளோ மனைகளோ ஒதுக்கீடு செய்யப் ணப்பக் கட்டணம் மற்றும் முன்வைப்புத் தொகையை (EMD) இணையவழி வங்கி சேவை அல்லது யுபிஐ (UPI) மூலமாக செலுத்தி ஒப்புதல் சீட்டை பதிவிறக்கம் செய்துகொள்ள

## குறைந்த விலையில் வீடுகள், மனைகள் வாங்கலாம்




## தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB) மாநிலம் முழுவதும் மலிவு விலையில் அடுக்குமாடி குடியிருப்புகள், தனி வீடுகள், வணிக கடைகள் மற்றும் மனை பிரிவுகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. முன்னர் இத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்க அரசு அலுவலகங்களுக்கு நேரில் சென்று நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் தற்போதைய நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப வசதியால், பொதுமக்கள் அனைவரும் தங்களின் வீட்டிலிருந்தபடியே இணையதளம் மூலம் மிக எளிதாக விண்ணப்பித்து பயனடையும் வகையில் ஆன்லைன் விண்ணப்ப முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அதிகாரப்பூர்வ இணையதமான tnhb.tn.gov.in என்பதில் நுழைந்து, பொதுமக்கள் தங்களுக்கு தேவையான வீடு அல்லது கடை தொடர்பான விவரங்களை மிக தெளிவாக தெரிந்துகொள்ள முடியும். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க விரும்புபவர் இந்திய குடிமகனாகவும், 21 வயது பூர்த்தியடை ந்தவ பட்டிருக்க கூடாது. விண்ணப்பதாரர்களின் வருமான அளவை கொண்டு பொருளாதாத்தில் பின்தங்கிய பிரிவு, குறைந்த வருவாய் பிரிவு, மத்திய வருவாய் பிரிவு மற்றும் உயர் வருவாய் பிரிவு என நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு திட்டங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரரின் ஆதார் அட்டை, குடும்ப அட்டை(ரேஷன்கார்டு), வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ், புகைப்படங்கள், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் மற்றும் கைபேசி எண் ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்துக்கொள்வது அவசியமாகும்.

இணையதளத்திற்கு சென்றவுடன் முதலில் புதிய பயனர் கணக்கை (New Registration) உருவாக்க வேண்டும். அதன் பின் உள்நுழைந்து, நமக்கு விருப்பமான மாவட்டம் மற்றும் பகுதியை தேர்ந்தெடுத்து, அதற்கான விண்ணப்பப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள தனிப்பட்ட விவரங்கள் மற்றும் வருமான விவரங்களை சரியாகப் பூர்த்தி செய்து ஆவணங்களை பதிவேற்ற வேண்டும். தொடர்ந்து, விண் லாம். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதியை வாரியம் நீட்டித்துள்ளது. குலுக்கல் முறை (Lottery Scheme) திட்டங்களுக்கு விண்ணப்பிக்க செப்டம்பர் மாதம் வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில், 'முதலில் வருபவருக்கு முன்னுரிமை' (First Come First Serve) அடிப்படையிலான மனை மற்றும் வீடு ஒதுக்கீடுகளுக்கு கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு, பொதுமக்கள் தொடர்ந்து விண்ணப்பிக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், வீடுகள் மற்றும் கடைகள் காலியாக உள்ள எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டுமே ஒதுக்கப்படும் என்பதால், கடைசி தேதி வரை காத்திருக்காமல் விரைவாக விண்ணப்பிப்பது சிறந்தது. அரசு வழங்கும் இந்த அருமையான வாய்ப்பை பயன்படுத்தி, எந்தவித இடைத்தரகர்களின் உதவியும் இன்றி பொதுமக்கள் தாங்களாகவே இணைய வழியில் விண்ணப்பித்து தங்களது சொந்த வீடு மற்றும் தொழில் கனவை சுலபமாக நனவாக்கி கொள்ளலாம்.

### ஸ்ரீபெரும்புதூர் அருகே

# ஆக்சிஜன் டேங்கர் லாரியில் திடீர் கசிவு

## வெண்புகை மண்டலமாக மாறிய சாலை

சென்னை, ஸ்ரீபெரும்புதூர் தாம்பரம் சாலையில் நின்றுகொண்டிருந்த ஆக்சிஜன் டேங்கர் லாரியில் இருந்து ஏற்பட்ட திடீர் கசிவு காரணமாக, அப்பகுதி முழுவதும் அடர்ந்த வெண்புகை மண்டலமாக மாறியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஸ்ரீபெரும்புதூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் பெரிய தொழிற்சாலைகள் நிறைந்த இடங்களாகும். அங்குள்ள தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காகவோ அல்லது மருத்துவத் தேவைக்காகவோ திரவ ஆக்சிஜன் ஏற்றிய டேங்கர் லாரி ஒன்று ஸ்ரீபெரும்புதூர் தாம்பரம் நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தது.



அப்போது, லாரியின் வால்வுப் பகுதியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ஆக்சிஜன் கசியத் தொடங்கியது. திரவ ஆக்ஸிஜன் காற்றில் கசியும்போது, அது வளிமண்டல ஈரப்பதத்துடன் வினை புரிந்து அடர்ந்த வெண்புகையை உருவாக்கியது. இதனால் சில நிமிடங்களிலேயே அந்த சாலை முழுவதும் பனிமூட்டம் போல் வெண்புகை சூழ்ந்தது. புகைமூட்டம் மிக அடர்த்தியாக இருந்ததால், எதிரே வரும் வாகனங்கள்கூட தெரியாத நிலை ஏற்பட்டது. சாலையின் ஒரு பகுதி முற்றிலும் மறைந்ததால், விபத்து ஏதும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தினர். சில நொடிகள் அங்கு என்ன நடக்கிறது என்று தெரியாமல் அப்பகுதி மக்கள் மற்றும் பாதசாரிகள் பயந்து ஓடினர். தகவல் அறிந்தவுடன் போலீசாரும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். அசம்பாவிதங்களைத் தவிர்க்க அந்த பாதையில் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டது. பிறகு, தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் டேங்கரின் கசிவு சரிசெய்யப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. ஆக்ஸிஜன் என்பது எளிதில் தீப்பற்றக்கூடிய வாயு அல்ல என்றாலும், அது எரியும் தன்மைக்கு துணை புரியும் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த சம்பவத்தால் அந்த சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.




### தொகுதி மறுவரையறை விவகாரம்:

# தவெக நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை

## அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் முதல் அமைச்சர் விஜய், தனது நிலைப்பாட்டை மாற்றி உள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் இன்று நடந்த தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய விஜய், "மக்களவையில் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையாமல் இருப்பதை சட்ட ரீதியாக உறுதி செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார். கடந்த வாரம் மக்களவை எம்.பி.க்கள் எண்ணிக்கையை மாற்றக் கூடாது என சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிலைப்பாடு மாற்றம் என விமர்சனம்

543 எம்பிக்கள் என்ற எண்ணிக்கையை மாற்றக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்து முதல் அமைச்சர் விஜய் தற்போது மாறியிருப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், இது குறித்து விளக்கம் அளித்து இருக்கும் அமைச்சர் நிர்மல் குமார் கூறியிருப்பதாவது; ஒவ்வொரு மாநிலங்களின் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ப்பட்டது. தமிழ்நாட்டுக்கு மின்சார தேவை இருந்தது. நம்முடைய நிலங்கள் அதிகமாக பொதுத்துறை நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதே மாதிரி ஒவ்வொரு மாநிலங்களின் தேவைகள், பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ப்பட்டது.

கவுன்சிலில் விவாதிக்கவில்லை

அடுத்த கூட்டம் தெலுங்கானாவில் வைக்கலாமா? என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தவெக நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. 543 என்ற எண்ணிக்கையே தொடர வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

யாரும் திரித்து பேச வேண்டாம். காவிரி விவகாரம் உச்சநீதிமன்றத்தில் இருக்கும் விவகாரம். எனவே அது குறித்து இந்த கவுன்சிலில் விவாதிக்கவில்லை. முல்லை பெரியாறு அணை உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டில் 39 எம்பிக்கள் தொடர வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. தென் மாநிலங்களைத்தான் தொகுதி மறுவரையறை பாதிக்கும்" என்றார்.

# மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு

## கலெக்டர் வந்தனா கார்க் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம்குறித்துமாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் தலைமையில் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கூட்டரங்கில் இன்று (20.08.2026) நடைபெற்ற இக்கூட்டத்தில், வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக, பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை 6 முதல் 8ம் வகுப்பு வரை விரிவுபடுத்தி செயல்படுத்துவது, மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம், இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவை குறித்து கலெக்டர் கேட்டறிந்தார்.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு பெற்றுத் தரப் பட்டுள்ள விவரங்கள், இதுவரை வழங்கப்பட்ட கடன் இணைப்புகளின் எண்ணிக்கை மற்றும் மகளிர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திட்டப் பணிகளை உரிய காலக்கெடுவிற்குள் சிறப்பாக செயல்படுத்துவதுடன், தகுதியான மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை விரைந்து பெற்றுத் தர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட கலெக்டர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, உதவி திட்ட அலுவலர்கள், உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை) உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





சேத்துப்பட்டில் காரில் கடத்தப்பட்ட

# 275 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு பகுதியில் போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், காரில் கடத்தப்பட்ட சுமார் 275 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

சேத்துப்பட்டு காவல் நிலைய போலீசாருக்கு இன்று (20.08.2026) காலை கிடைத்த ரகசிய தகவலின் பேரில், உதவி ஆய்வாளர் லதா மற்றும் காவலர் விக்னேஷ் ஆகியோர் சந்தேகத்திற்கிடமான வாகனத்தை கண்காணித்து பிடிக்கச் சென்றனர்.

சேத்துப்பட்டு பேருந்து நிலையம் அருகே நான்கு ரோடு பகுதியில் பணியில் இருந்த காவலர் விக்னேஷ், சந்தேகத்திற்கிடமாக வந்த காரை நிறுத்துமாறு சைகை காட்டினார். ஆனால், காரை ஓட்டி வந்த நபர் வாகனத்தை நிறுத்தாமல் வேகமாக இயக்கி அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றார்.

இதையடுத்து உதவி ஆய்வாளர் லதா அந்த காரை வழிமறித்து நிறுத்த முயன்றார். இருப்பினும், ஓட்டுநர் காரை வேகமாக இயக்கிச் சென்றார். தொடர்ந்து போலீசார் அந்த வாகனத்தை துரத்திச் சென்றனர்.

சேத்துப்பட்டு பழம்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி அருகே உள்ள வேகத்தடை பகுதியில், பொதுமக்களின் உதவியுடன் காரை போலீசார் மடக்கிப் பிடித்தனர். பின்னர் வாகனத்தை சோதனை செய்தபோது, அதில் சுமார் 275 கிலோ புகையிலைப் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து புகையிலைப் பொருட்களுடன் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சேத்துப்பட்டு காவல் நிலைய போலீசார் சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் காவல்துறையினருக்கோ, பொது மக்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி

# கிராம உதவியாளர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கம் சார்பில் 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றிட வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை தொடர்ந்து வழங்க வேண்டும், கிராம உதவியாளர்களுக்கான 2,299 காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பயில் வருவாய்த்துறையில் உள்ள எழுத்தர், ஓட்டுநர் உள்ளிட்ட பணிகளுக்கு கிராமஉதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைத் தலை



றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத்தலைவர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் வடிவேல் வரவேற்றார். கிராமஉதவியாளர்களுக்கு அலுவலக உதவியாளர்களுக்கு இணையான ரூ.15,700 அடிப்படை ஊதியம் வழங்க வேண்டும், 2003ம் ஆண்டுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட கிராம உதவியாளர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்க தனி அரசாணை வெளியிட வேண்டும், கிராம உதவியாளர் என்ற பதவிப் பெயரை துணை கிராம நிர்வாக அலுவலர் என மாற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் முன் வைத்தனர்.

கிராம நிர்வாக அலுவலர் பதவி உயர்வுக்கான தகுதி காலத்தைப் போல, கிராம உதவியாளர்களுக்கான பதவி உயர்வு தகுதி காலத்தையும் 10 ஆண்டுகளில் இருந்து 6 ஆண்டுகளாக குறைக்க வேண்டும். கல்வித் தகுதி அடிப்படை

வர்கள் வாசு, ஆறுமுகம், மாவட்ட இணைச் செயலாளர் முரளி, செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், மணிகண்டன், மகளிரணி நிர்வாகிகள் புனிதா, நூராணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாநில செயற்குழு உறுப்பினர் தவமணி கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். மாநிலச் செயலாளர் ஜமுனா, மாவட்டப் பொருளாளர் ரேணுகா ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

# "சின்னமனூரில் விநாயகர் சதுர்த்தி விழா"175க்கும் மேற்பட்ட இடங்களில் சிலைகள் பிரதிஷ்டை செய்ய தீவிர ஏற்பாடு



தேனி மாவட்டம், சின்னமனூர் நகர் மற்றும் ஒன்றிய இந்துமுன்னணி சார்பாக 43ஆம் ஆண்டு ஸ்ரீவிநாயகர்சதுர்த்தி விழா வரும் செப்டம்பர் மாதம் 14, 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது. இதனையொட்டி சின்னமனூர் நகர் மற்றும் ஒன்றியப் பகுதிகளில் 175 க்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர்சிலைகளை பிரதிஷ்டை செய்து சிறப்பு வழிபாடுகள்நடத்தமுடிவு செய்யப்பட்டுள்ளது. விழாவிற்காக விநாயகர் திருமேனிகளை வடிவமைக்கும் பணிகள் தற்போது மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக காஞ்சிபுரத்தில் இருந்து உயர்தர மூலப் பொருட்கள் கொண்டு வரப்பட்டு, சின்னமனூர் பாஸ்கரன் ரைஸ்மில் வளாகத்தில் சிற்பிகள் சரவணன், சக்தி மற்றும் சேகர் ஆகியோரால் நேர்த்தியான கலைநயத்துடன் திருமேனிகள் செய்யப்படவுள்ளன.

இந்த தயாரிப்பு மற்றும் பூர்வாங்க பணிகள் அனைத்தும் இந்துமுன்னணி பேரியக்கத்தின் தேனி தெற்கு மாவட்ட தலைவர் சுந்தர், மாவட்ட பொதுச்செயலாளர் பாலமுருகன், நகர தலைவர் சுருளிமுத்து, நகரதுணைத் தலைவர் ஆனந்த் மற்றும் நகர பொறுப்பாளர் யுவராஜ் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் திறம்பட நடைபெற்று வருகின்றனர்.



# செய்யாறு நகராட்சி கூட்டத்தில் அடிப்படை வசதிகள் குறித்து கவுன்சிலர்கள் வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சியின் மாதாந்திர நகர மன்ற கூட்டம் நகர மன்ற தலைவர் மோகனவேல் தலைமையில் நடைபெற்றது. நகராட்சி ஆணையர் ஆண்ட்ரூஸ் வரவேற்றார். துணைத்தலைவர் பேபி ராணி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய கவுன்சிலர்கள், பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் சீராக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். மேலும், சாலைகள் சீரமைப்பு, கழிவுநீர் கால்வாய், தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

கொடநகர் பகுதியில் கழிவுநீர் கால்வாய் மற்றும் காரியமேடை அமைக்க வேண்டும் என்றும், கிடங்கு தெருவில் தேங்கும் கழிவுநீரை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கவுன்சிலர்கள் கோரிக்கை விடுத்தனர். பேருந்து நிலையம் முன்புள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், சேரன், சோழன், பாண்டியன் தெருக்களில் குடிநீர் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. நகராட்சி பகுதியில் நிலவிய குரங்கு தொல்லைக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்த நகராட்சி துப்புரவு ஆய்வாளருக்கு கவுன்சிலர்கள் நன்றி தெரிவித்தனர். கூட்டத்தில் கவுன்சிலர்கள் சரஸ்வதி, சின்னமணி, ரமேஷ், வெங்கடேசன், விஸ்வநாதன், சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, பொதுமக்களின் பல்வேறு அடிப்படை வசதிகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# சின்னமனூர் ஆட்டோ ஓட்டுநர்களை ஒழுங்குபடுத்த காவல்துறையினருக்கு கோரிக்கை



தேனி மாவட்டம் சின்னமனூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் இயங்கி வருகின்றன. பொதுமக்கள் மற்றும் பயணிகளின் அன்றாட போக்குவரத்து தேவைகளுக்கு ஆட்டோக்கள் முக்கிய பங்கு வகித்து வரும் நிலையில், சில ஆட்டோ ஓட்டுநர்களின் முறையற்ற நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த ஆட்டோ ஓட்டுநர்களின் பெயரும் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறிப்பாக, சில ஆட்டோ ஓட்டுநர்கள் மதுபோதையில் வாகனங்களை இயக்குவது, உரிய ஓட்டுநர் உரிமம் (Licence) இல்லாமல் ஆட்டோ ஓட்டுவது, காப்பீடு (Insurance), தகுதிச்சான்று (FC) மற்றும் அனுமதிச் சீட்டு (Permit) ஆகியவை இன்றி வாகனங்களை இயக்குவது போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், பயணிகளிடம் அதிக வாடகை வசூலிப்பது, பொதுமக்களிடம் மரியாதை குறைவாக நடப்பது போன்ற செயல்களாலும் பொதுமக்கள்பெரிதும்அவதிக்குள்ளாகின்றனர். நேர்மையான முறையில் தொழில் செய்து வரும் ஆட்டோ ஓட்டுநர்கள், "ஆட்டோ தொழிலாளர்களின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு காவல்துறை சில நேரங்களில் பெருந்தன்மையுடன் மென்மையான போக்கை கடைப்பிடிக்கிறது. ஆனால், அதை சிலர் தவறாக பயன்படுத்தி கொண்டு இதுபோன்ற விதிமீறல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் முறைப்படி ஆவணங்களை வைத்துக்கொண்டு நேர்மையாக தொழில் செய்யும் நல்ல ஓட்டுநர்களுக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது" என ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். எனவே, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், ஆட்டோ தொழிலின் நம்பக தன்மையை பாதுகாக்கவும் சின்னமனூர் காவல்துறையினரும், உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து ஆய்வாளரும் (RTO) இணைந்து அதிரடி தணிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது இதுபோன்ற தொடர் வாகன சோதனைகளை நடத்த வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆவடி காவல் ஆணையரகத்தில் இணையவழி குற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்பான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம்



ஆவடி காவல் ஆணையரகத்தில் iGOT Karmayogi இணைய முகப்பின் மூலம் காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கான இணையவழி குற்றங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு குறித்த பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இப்பயிற்சியில், காவல்துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் பயன்பாடு, இணைய வழி குற்றங்களின் தன்மை, இணையவழி குற்றங்களை கண்டறிதல், தடுப்பு மற்றும் திறம்பட கையாளுதல், மேலும் நவீன தொழில் நுட்பங்களை காவல் பணிகளில் பயன்படுத்தும் முறைகள் குறித்து காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு விரிவான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு இணையவழி குற்றங்களை திறம்பட கையாளுதல், தொழில்நுட்ப ரீதியாக விசாரணையை மேம்படுத்துதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை காவல் பணிகளில் பயனுள்ள வகையில் பயன்படுத்துதல் தொடர்பாக அறிவுரை வழங்கினார்

மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆய, அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேனி மண்டலத்தில், தேனி மாவட்டத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வுப் பெற்றப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள குறைகள் தொடர்பாக, பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் தலைமையில் 25.08.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு காணொளிக் காட்சி வாயிலாக குறைதீர்வு கூட்டம் நடைபெற உள்ளது.

எனவே, ஓய்வூதியப் பயன்கள் தொடர்பான குறைகள் நிலுவையில் உள்ள ஓய்வுப் பெற்ற பேரூராட்சிப் பணியாளர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது குறைகளைத் தெரிவித்து தீர்வு பெறலாம்.

இக்குறைதீர் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் ஓய்வுப் பெற்ற பணியாளர்கள் தேனி மண்டலத்திற்குட்பட்ட பேரூராட்சி அலுவலகம் அல்லது தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு நேரில் ஒரு மணி நேரம் முன்னதாக கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைர் மரு.இரா.வைத்திநான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம்128.ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிந்து? செய்கிறார்களா தெரியாமல் செய்கிறார்களா? வருவாய் கோட்டாச்சியர் மற்றும் பழனி வட்டாச்சியர் மற்றும் பழனி பொதுப்பணி துறை மற்றும் அமரபூண்டி ஊராட்சி மன்ற முன்னால் தலைவர் R. மனோகரன் மற்றும் அமரபூண்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அதிகாரிகள் ஆதரவோடு கிராவல் மண் கொள்ளை நடப்பதை கண்டுகொள்ளாத அரசு அதிகாரிகள் உட்பட்ட அமரபூண்டி ஊராட்சிக்கு உட்பட்ட கஞ்சநாயக்கண்பட்டி கரிசல் குளத்தில் 24 மணி நேரமும் வண்டல் மண் அல்லுவதாக கூறி 3500 க்கும் மேற்பட்ட யூனிட் கணக்கில் டிராக்டர்களில் கிராவல் மண்ணை அள்ளி தொடர்ந்து பல முறை ஊழல் செய்து வருகின்றனர் அதிகாரிகள் இப்பகுதி மக்கள் வருவாய்த்துறை மற்றும் கனிமவளத்துறை அதிகாரிகளிடம் புகார் அளித்தும் யாரும் கண்டுகொள்ளவில்லை என்றும் தற்போது வரை அதிகாரிகள் ஆதரவோடு அனுமதி இல்லாமல் டிராக்டர் மூலம் மண் கடத்தல் தொடர்ந்து நடைபெற்று வருவதாக இப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு நடவடிக்கை எடுப்பாரா மாவட்டம் ஆட்சியார்? பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எதிர்பார்ப்பு?

# பழனியில் போதை இல்லா எதிர்காலம் வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி

பழனியில் அதிதி பவுண்டேஷன் மற்றும் தமிழக வெற்றிக் கழகம் திண்டுக்கல் மேற்கு மாவட்டம் சார்பில், "போதை இல்லா எதிர்காலம் படைப்போம்; மக்கள் நலன் காப்போம்" என்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பழனியாண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருந்து மயில் ரவுண்டானா வரை நடைபெற்ற பேரணியில் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பதாகைகள் ஏந்தி விழிப்புணர்வு கோஷங்களை எழுப்பினர்.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி N. பாலன், மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் பேரணியை தொடங்கி வைத்தனர்.




நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர், புலிப்பாணி சித்த மருத்துவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில், திண்டுக்கல்–தேனி மாவட்ட DIG சசிமோகன் அவர்கள் இன்று ஆய்வு மேற்கொண்டார். காவல் பணிகள் மற்றும் அலுவலக செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

# சின்னமனூரில் டிட்டோஜாக் சார்பில் மாபெரும் கவனஈர்ப்பு கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்) சார்பில், 20 அம்ச கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி மாநிலம் தழுவிய அளவில் அனைத்து மாவட்டங்களிலும் வட்டாரக் கல்வி அலுவலகங்கள் முன்பு மாபெரும் கவனஈர்ப்பு கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றிய டிட்டோஜாக் சார்பில் (20.08.2026) வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில், சின்னமனூர் உழவர் சந்தை அருகில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கவனஈர்ப்பு கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது.




இப்போராட்டத்திற்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி திரு.அ.மணிகண்டன் மற்றும் தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி திருமதி.M.ஜீனத் பாலீஸ் ஆகியோர் தலைமை தாங்கினர். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி திரு.ஜோ.கண்ணன் மற்றும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி திரு.ப.பால்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் டிட்டோஜாக் இணைப்பு சங்கங்களின் மாநில மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு போராட்ட விளக்கவுரையாற்றினர்.

ஆற்றல்மிக்க ஆசிரியர் பேரினமே... நாம் வென்றெடுத்த கோரிக்கைகள் அனைத்தும் போராட்டங்கள் வாயிலாக பெற்றவையே, போராட்டங்கள் இல்லாமல் எந்தக் கோரிக்கையையும் வென்றெடுத்ததில்லை என்ற வரலாற்றினை மனதில் கொண்டு, புதிய அரசில் நமது கோரிக்கைகளை வென்றெடுத்திட டிட்டோஜாக் பேரமைப்பு விடுத்த அழைப்பின் பேரில் இக்கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான ஆசிரியர்கள் திரளாகக் கலந்துகொண்டு எழுச்சியுடன் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர். இதற்கான ஏற்பாடுகளை இணைப்பு சங்கங்களின் வட்டார செயலாளர்கள் செய்திருந்தனர்.

## பழனியில் அரசு புறம்போக்கு நிலத்தில்

# சட்டவிரோதமாக மரம் வெட்டிய நபர் கைது

## டிராக்டர்,மரம் வெட்டும் இயந்திரம் பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரத்தில் வரட்டாறு பகுதியில் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள வாகை, வேம்பு, புளியமரம் உள்ளிட்ட மரங்களை சிலர் வெட்டி டிராக்டரில் ஏற்றிக் கொண்டிருந்தனர். அங்கு வந்த வருவாய்துறை அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவம் இடத்திற்கு வந்த அடிவாரம் காவல் நிலைய போலீசார் மரம் வெட்டிக்கொண்டிருந்த அடிவாரம் மருத்துவகாலனியை சேர்ந்த கருப்பசாமி(55) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து டிராக்டர்,மரம் வெட்டும் இயந்திரம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்

# சோழவரம் குறுவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள்

மாதவரம் தொகுதி சோழவரம் குறுவட்ட அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் செங்குன்றம் ஒஆர்ஜி என் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தலைமையாசிரியர் கலாமணி தலைமையில் நடைபெற்றது.





உடற்கல்வி ஆசிரியர் சங்கச் செயலாளர் டி.குப்பன், உடற்கல்வி ஆசிரியர் மு. பழனி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

மனோபாலா அறக்கட்டளையின் நிறுவனரும் தவெக நிர்வாகியுமான லயன் ஆர்.முனுசாமி, எம்கேஎல் நர்சிங் கல்லூரியின் முதல்வர் பனிமலர், தவெக செங்குன்றம் நகரச் செயலாளர் கே.விஜி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு தடகளப் போட்டிகளை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் நகர இணைச் செயலாளர் பைரவா நா.வினோத், பொருளாளர் எம்.சுரேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பிரவீன், நகர செயற்குழு உறுப்பினர்கள் ஜெ. ஆசாத், கே.வில்லியம் ஜோசப், நகர நிர்வாகிகள் ஜி.பிரபு, ஆசைத்தம்பி, ஜீலான்,காசிவிஸ்வநாதன், குமார், பிரபாகரன் உள்ளிட்ட உடற்கல்வி இயக்குநர், ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடற்கல்வி ஆசிரியர்கள் பூமிநாதன், சிவா ஆகியோர் நன்றி நவின்றனர். மனோபாலா அறக்கட்டளையின் நிறுவனரும் தவெக நிர்வாகியுமான லயன் ஆர்.முனுசாமி ஏற்பாட்டில் தடகளப் போட்டியில் பங்கேற்ற அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

## திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே

# அரசு பஸ்ஸில் சென்ற பெண்ணை போட்டோ எடுத்தவர் கைது




திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே மானூரைச் சேர்ந்தவர் கலாநிதி.இவர் மானூரில் இருந்து பழனி சென்ற அரசு பஸ்ஸில் சென்ற இளம் பெண்ணை போட்டோ எடுத்துள்ளார் இதுகுறித்து இளம்பெண் அளித்த புகாரின் பேரில் பழனி டவுன் போலீசார் கலாநிதியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# "தேனி மாவட்டத்திலேயே சாதனை" குச்சனூர் பேரூராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பை விரைந்து முடித்த ஆசிரியர்களுக்கு சிறப்பு மரியாதை

தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்து, மாவட்ட அளவிலேயே குச்சனூர் பேரூராட்சி முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

கடந்த ஆகஸ்ட் 1ம் தேதி முதல் குச்சனூர் பேரூராட்சியில் உள்ள 12 வார்டுகளிலும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பணிகள் முறைப்படி தொடங்கப்பட்டன. இப்பணிக்காக நியமிக்கப்பட்ட 12 ஆசிரியர்களும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டு பகுதிகளில் வீடு வீடாகச் சென்று தரவுகளை சேகரித்து, மிகத் துல்லியமாகவும் விரைவாகவும் பணிகளை முடித்தனர். ஆசிரியர்களின் இந்த அர்ப்பணிப்பான உழைப்பினால், தேனி மாவட்டத்திலேயே மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியை முழுமையாக முடித்த முதல் பேரூராட்சி என்ற பெருமையை குச்சனூர் பெற்றது.



இத்தகைய வரலாற்று சாதனைக்கு காரணமான ஆசிரியர்களை பாராட்டும் வகையில், குச்சனூர் பேரூராட்சி தலைவர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோர் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. அதில் சிறப்பாக பணியாற்றிய 12 ஆசிரியர்களுக்கும் பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி, நினைவு பரிசுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. ஆசிரியர்களின் சுறுசுறுப்பான செயல்பாடும், பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்புமே இச்சாதனைக்கு முக்கிய காரணம் என பேரூராட்சி நிர்வாகத்தினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# திண்டுக்கல் அருகே சட்டவிரோதமாக கிராவல் மண் கடத்திய டிப்பர் லாரி பறிமுதல்







திண்டுக்கல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை தனி துணை வட்டாட்சியர் தலைமையிலான குழுவினர் வக்கம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக கிராவல் மண் ஏற்றி வந்த டிப்பர் லாரியை நிறுத்தினார் டிப்பர் லாரி டிரைவர் லாரியை நிறுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார் இதனைத்தொடர்ந்து அதிகாரிகள் கிராவல் மண்ணுடன் இருந்த டிப்பர்லாரியை பறிமுதல் செய்து தாலுகாகாவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இது குறித்து தாலுகாகாவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய டிரைவரை தேடி வருகின்றனர்

# சோழவரம் அருகே 30 கிலோ கஞ்சா பறிமுதல் கடத்தி வந்த இருவர் கைது

தமிழக முதலமைச்சர் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவும், ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் இரா.சிவகுமார் மேற்பார்வையிலும், செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையாளர் கே.மகேஸ்வரி அறிவுறுத்தலின்படியும், செங்குன்றம் காவல் உதவி ஆணையாளர் பிராங்க் டி ரூபன் மேற்பார்வையிலும், சோழவரம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கிளாடின் டேவிட் தலைமையிலான போலீசார் கஞ்சா விற்பனை தொடர்பாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், வண்டலூர்–மீஞ்சூர் வெளிவட்டச் சாலை, விஜயநல்லூர் பாலத்தின் கீழ் உள்ள சர்வீஸ் சாலை அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த TN 85 M 5556 என்ற பதிவெண் கொண்ட சரக்கு வாகனத்தை மடக்கி வாகனத்தில் வந்திருந்த செங்குன்றம் காந்திநர் பரதன் (வ/22), சோழவரம் ஆட்டந்தாங்கல் சந்திரன் (வ/28) ஆகிய இருவரிடம் விசாரணை மேற்கொண்டு, வாகனத்தை சோதனை செய்ததில், 15 பார்சல்களில் சுமார் 30 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்து, மேற்கண்ட இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டதில், கஞ்சாவை ஆந்திர மாநிலத்தில் இருந்து வாங்கி கடத்தி வந்தது தெரியவந்தது. இது தொடர்பாக சோழவரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.




## குடியிருப்பு பகுதியில்

# புதிதாக திறக்கப்பட்ட டாஸ்மாக் கடைக்கு எதிர்ப்பு

## பெண்கள் முற்றுகைப் போராட்டம்

திருவண்ணாமலை அருகே கோட்டம்பாளையம் சாலையில் குடியிருப்பு பகுதிக்கு அருகே புதிதாக திறக்கப்பட்டுள்ள டாஸ்மாக் மதுபானக் கடைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏராளமான பெண்கள் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கோட்டம்பாளையம் சாலையில் புதிதாக டாஸ்மாக் மதுபானக் கடை திறக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த கடை அமைந்துள்ள பகுதியில் ஏராளமான குடியிருப்புகள் உள்ளதுடன், பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் சாலையும் அருகில் அமைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் வசிக்கும் பெண்கள் மற்றும் பொதுமக்கள் கடும் அதிருப்தி அடைந்தனர். இந்நிலையில், இன்று பெண்கள் உள்ளிட்ட அப்பகுதி பொதுமக்கள் டாஸ்மாக் கடை முன்பு திரண்டு முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடையை உடனடியாக அகற்றி, வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் கூறுகையில், குடியிருப்பு பகுதியில் மதுபானக் கடை அமைந்துள்ளதால் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அச்சத்துடன் சென்று வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மதுபானம் வாங்க வரும் நபர்களால் அப்பகுதியில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மதுபானக் கடையை சுற்றியுள்ள பகுதிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன், பொதுமக்களின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படும் சூழல் உருவாகும் என போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக, பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பயன்படுத்தும் முக்கிய சாலையோரத்தில் மதுபானக் கடை அமைக்கப்பட்டுள்ளதால், எதிர்காலத்தில் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க கடையை உடனடியாக அகற்றவேண்டும்எனஅவர்கள்கோரிக்கை விடுத்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் மற்றும் அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர்ந்து அதிகாரிகளிடம் மனு அளிக்க உள்ளதாக தெரிவித்தனர். குடியிருப்பு பகுதியில் புதிதாக திறக்கப்பட்டுள்ள மதுபானக் கடையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் பெண்கள் நடத்திய முற்றுகைப் போராட்டத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# திண்டுக்கல் அருகே கஞ்சா விற்பனை செய்த 3 வாலிபர்கள் கைது

## 1.100 கிலோகிராம் கஞ்சா, 2 டூவீலர்கள் பறிமுதல்

திண்டுக்கல், தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் உலகநாதன் தலைமையில் சார்பு ஆய்வாளர் சக்திவேல் மற்றும் காவலர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது

திண்டுக்கல்பழனிபைபாஸ்toவத்தலகுண்டுபைபாஸ் செல்லும் சாலை முத்தழகுப்பட்டி பிரிவு அருகே இரு சக்கர வாகனத்தில் வைத்து கஞ்சா விற்பனை செய்த

எமக்கலாபுரத்தை சேர்ந்த அஜித்குமார்(27), செட்டிநாயக்கன்பட்டியை பாலமுருகன்(32), கரட்டழக்கன்பட்டியை சேர்ந்த விஜயன்(30) ஆகிய 3 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 1.100 கிலோகிராம் கஞ்சா, 2 டூவீலர்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நம்பேடு ஊராட்சியில் (20.08.2026) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள விளம்பர பதாகையில் உள்ள புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# கே.ஜி.எஃப். ஆண்டர்சன் பேட்டை பேருந்து நிலையத்தில் ராஜீவ் காந்தி சிலை திறப்பு

கே.ஜி.எஃப். ஆண்டர்சன் பேட்டை பேருந்து நிலைய வளாகத்தில், சுமார் 20 ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருந்த முன்னாள்பிரதமரும்பாரத ரத்னா விருதுபெற்ற வருமானராஜீவ்காந்தியின் சிலை, இன்று தங்கவயல் சட்டமன்றஉறுப்பினர்ரூப கலா எம். சசிதர் அவர்க ளால் திறந்து வைக்கப் பட்டது.

நீண்ட காலமாக திறப்பு விழாவுக்காக காத்திருந்த இந்தசிலைதிறப்புநிகழ்வு, காங்கிரஸ் கட்சியினர் மற் றும் பொதுமக்கள் மத்தி யில் மகிழ்ச்சியை ஏற்படுத் தியது.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் ரூபகலா எம். சசிதர் அவர்கள் கலந்து கொண்டு, ராஜீவ் காந்தி யின் சிலையை திறந்து வைத்து மரியாதை செலுத் தினார். தொடர்ந்து சிலைக்கு மாலை அணி வித்துமலர்தூவிமரியாதை செலுத்தப்பட்டது.

ராஜீவ் காந்தி நாட்டின் வளர்ச்சிக்காக ஆற்றிய பங் களிப்புகள், இளைஞர்க ளுக்கான அவரது தொலை நோக்கு பார்வை, தொழில்நுட்பவளர்ச்சிக்கு அவர் அளித்த முக்கியத்துவம் உள்ளிட் டவை நிகழ்ச்சியில் நினை வுகூரப்பட்டன.

சுமார் இரண்டு தசாப்தங் களாக திறக்கப்படாமல் இருந்த சிலை தற்போது திறக்கப்பட்டிருப்பது, ஆண்டர்சன் பேட்டை பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற் றுள்ளது. நீண்ட கால கோரிக்கைக்கு தீர்வு கிடைத்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்தனர்.




இந்த சிலை திறப்பு விழா வில் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஏரா ளமான பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைசிறப்பித்தனர். விழா நடைபெற்ற பகுதி முழுவதும் கட்சி கொடி கள் மற்றும் அலங்காரங்க ளால் களைகட்டியது. பொதுமக்கள் ஆர்வத்து டன் கலந்து கொண்டு, ராஜீவ்காந்தியின்சிலையை பார்வையிட்டு மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பேசிய கட்சி நிர்வாகிகள், ராஜீவ் காந்தியின் கொள்கைக ளையும் நாட்டின் வளர்ச் சிக்கான அவரது பங்களிப் புகளையும் நினைவுகூ ர்ந்தனர். மேலும், மக்க ளின் நீண்டகால கோரிக் கைகளை தொடர்ந்து முன் னெடுத்து தீர்வு காண்பதில் சட்டமன்றஉறுப்பினர்ரூப கலா எம். சசிதர் மேற் கொண்டு வரும் நடவடிக் கைகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

சுமார் 20 ஆண்டுகளுக் குப் பிறகு ஆண்டர்சன் பேட்டை பேருந்து நிலை யத்தில் ராஜீவ் காந்தியின் சிலை திறக்கப்பட்டுள்ள இந்த நாள், அப்பகுதி மக்க ளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாளாக அமைந் துள்ளது. நீண்ட கால காத் திருப்புக்குமுற்றுப்புள்ளி... ராஜீவ் காந்தியின் நினைவை போற்றும் வகையில் சிலை திறப்பு... கே.ஜி.எஃப். ஆண்டர்சன் பேட்டையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, காங்கிரஸ் கட்சியினரிடையேயும் பொதுமக்களிடையேயும் உற்சாகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

# கலசப்பாக்கம் அருகே வீட்டுக்குள் புகுந்த லாரி; வாசலில் பெருக்கிக் கொண்டிருந்த பெண் பலி

## உறவினர்கள் சாலை மறியல்

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக் கம் அருகே நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறும் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த லாரி, சாலையோர குடியி ருப்புக்குள் புகுந்து வீட் டின் முன்பு நின்றிருந்த பெண் மீது மோதியதில் அவர் சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரி ழந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட் டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது.

கலசப்பாக்கம் அருகே கடலாடி மதுரா புதுப்பேட்டை பகுதியில் செங்கம் – போளூர் நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சிறு பாலம் அமைக்கும் பணிக் காக சாலையோரத்தில் பெரிய பள்ளம் தோண்டப் பட்டு,

அதன் அருகே மண் குவித்து வைக்கப்பட்டி ருந்ததாக கூறப்படுகிறது. மேலும், கட்டுமானப் பகு தியைச் சுற்றி பாதுகாப்பு மண் தடுப்பும் அமைக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று காஞ்சிபுரம் பகுதியில் இருந்து போளூர் நோக்கி காலி ஈச்சர் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. கடலாடி மாம்பாக்கம் மெயின் ரோட்டில் உள்ள புதுப்பேட்டை பகுதியில் வந்தபோது,

எதிர்பாராதவிதமாக லாரி கட்டுப்பாட்டை இழந்ததாக கூறப்படுகிறது.

சாலையோரத்தில்குவிக் கப்பட்டிருந்த மண் மேட் டின் மீது வேகமாக ஏறிய லாரி,அங்கிருந்ததடுப்பை கடந்து அருகில் உள்ள குடி யிருப்பு பகுதிக்குள் புகுந் தது. அப்போது வீட்டின் முன்பு வாசலை பெருக் கிக் கொண்டிருந்த ரங்கநா தனின் மனைவி அமுதா







(50) மீது லாரி பயங்கரமாக மோதியது. இதில் பலத்த காயமடைந்த அமுதா சம் பவ இடத்திலேயே உயிரி ழந்தார்.

லாரியை வீரளூர் பகுதி யைச் சேர்ந்த சத்தியநாத னின் மகன் ஜெபஸ்டின் (36) ஓட்டி வந்ததாக கூறப் படுகிறது.

விபத்து குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று லாரியை பறிமு தல் செய்ததுடன், ஓட்டுநர் ஜெபஸ்டினை பிடித்து விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே, உயிரி ழந்த அமுதாவின் உடல் மீட்கப்பட்டு பிரேத பரி சோதனைக்காக திருவண் ணாமலை அரசு மருத்து வக் கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக் கப்பட்டது. விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து, விபத்துக்கான காரணம், லாரியின் வேகம் மற்றும் சாலை விரிவாக்கப் பணி கள் நடைபெற்ற பகுதி யில் மேற்கொள்ளப்பட்டி ருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தீவிர விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

உறவினர்கள் திடீர் சாலை மறியல்

அமுதா உயிரிழந்த தக வல் அறிந்த அவரது உறவி னர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள்கடும்அதிர்ச் சியடைந்தனர். சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெறும் பகுதியில் போதிய பாதுகாப்பு ஏற்பா டுகள் செய்யப்படாததே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் எனக் கூறி, கடலாடி–மாம்பாக்கம் பிர தான சாலையில் 50க்கும் மேற்பட்டோர் திடீரென திரண்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இதனால் அந்த பகுதி யில் வாகனப் போக்குவ ரத்து பாதிக்கப்பட்டு பரப ரப்பானசூழல்ஏற்பட்டது. தகவல் அறிந்து அங்கு சென்ற போளூர் டி.எஸ். பி. மனோகரன் மற்றும் கடலாடி போலீஸ் இன்ஸ் பெக்டர் சண்முகம் ஆகி யோர்போராட்டத்தில் ஈடு பட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி னர்.

விபத்து தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சாலைப் பணிகள் நடை பெறும் பகுதியில் பாது காப்பு ஏற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிக ளிடம் தெரிவித்து நடவ டிக்கை மேற்கொள்ளப்ப டும் என்றும் போலீசார் உறுதியளித்தனர்.

இதையடுத்து போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் சாலை மறியலை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர். நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டி ருந்த நிலையில், லாரி கட் டுப்பாட்டை இழந்து குடி யிருப்புக்குள் புகுந்து பெண் உயிரிழந்த சம்ப வம் அப்பகுதி மக்களி டையே பெரும் அதிர்ச்சி யையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந் தனா கார்க் தலைமையில் ஆகஸ்ட் மாதத்திற்கான மாவட்டஅளவிலானவிவ சாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் இன்று (20.08.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளா கத்தில் நடைபெற்றது.





வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற இக்கூட்டத் தில் மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவ சாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை முன் வைத்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும், கூட்டுறவு சங் கங்களில் சிறு, குறு விவசா யிகள் பெற்றுள்ள பயிர்க்க டன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண் டும், தனியார் மற்றும் கூட் டுறவு உர விற்பனை நிலை யங்களில் யூரியா தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கைஎடுக்கவேண் டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். மேலும், மாவட்டத்தில் உள்ள வரத்து மற்றும் போக்கு கால்வாய்களை தூர்வாரி சீரமைக்க வேண் டும், கமலப்புத்தூர் பொதுப்பணித்துறை ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், தண்டராம் பட்டு வட்டம் நாராயணக் குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட் டது.

சம்பா பருவ சாகுபடிக்கு தேவையான நெல் விதை களை அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் போது மான அளவு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத் தினர்.

விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கை கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கை மேற் கொண்டு, பிரச்சினை களுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந் தனா கார்க் அறிவுறுத்தி னார். தொடர்ந்து, விவசா யிகளிடமிருந்து தனிநபர் கோரிக்கை மனுக்களை யும் அவர் பெற்றுக்கொண் டார்.

முன்னதாக, வேளாண்மை மற்றும் உழ வர் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் வந் தனா கார்க் தலைமையில் வேளாண்உற்பத்திக்குழுக் கூட்டமும் நடைபெற்றது.

இதில் வேளாண் உற்பத்தி தொடர்பான பணிகள் மற் றும் விவசாயிகளின் நலன் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட் டது.

இக்கூட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவ லர் சிவசுப்பிரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, திருவண்ணா மலை வருவாய் கோட் டாட்சியர் செல்வம், மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (வேளாண்மை) மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) தி.மலர்விழி, திட்ட இயக் குநர் (பழங்குடியினர் நலன்) கலைச்செல்வி உள் ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# ஆணைவாடியில் புதிய குளம் அமைக்கும் பணி; வட்டார வளர்ச்சி அலுவலர் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் அடுத்த ஆணைவாடி ஊராட்சியில் மலையடி வார பகுதியில் விபிஜி ராம்ஜி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் புதிய குளம் அமைக்கும் பணியை வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தரா ஜூலு நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, பணியா ளர்களின் வருகைப் பதி வேடு முறையாக பராமரிக் கப்படுகிறதா,



பணிகள் திட்ட விதிமு றைகளின்படி தரமாக நடைபெறுகிறதா என்பது குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், பணிகளை தாமதமின்றி விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு தினக் கூலி அடிப்படையில் 125 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருவதாக வும்,

தகுதியான அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் வகையில் உரிய முறையில் வேலை வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பணி யாளர்களின் வருகைப் பதிவு மற்றும் பணியிட விவரங்களை முறையாக பதிவு செய்யவும் அறிவு றுத்தினார். ஆய்வின் போது ஓவர்சீயர் ஆனந்தகு மார், ஊராட்சி செயலாளர் சுரேஷ் மற்றும் பொதுமக் கள் உடனிருந்தனர்.

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில்

# போதை, மதுவுக்கு எதிரான மாநிலந் தழுவிய பரப்புரை குறித்து பத்திரிகையாளர் சந்திப்பு

ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த்தமிழ்நாடு & புதுச்சேரி சார்பில் மாநில தலைமைய கத்தில் மாதாந்திர பத்திரிகை யாளர் சந்திப்பு நிகழ்ச்சி சென்னை ஜமாலியா ஐஐசி அரங்கத்தில் நடைபெற்றது.







இந்நிகழ்வில், நாட்டில் தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ள பல்வேறு சமூக மற்றும் தேசியப் பிரச்சினைகள் குறித்து விரி வாக எடுத்துரைக்கப்பட் டது. குறிப்பாக, மது மற்றும் போதைக்கு எதிரான மாநி லம் தழுவிய பரப்புரை, கல்வி – கவலையளிக்கும் கள நிலவரம், போதை – நாளுக்கு நாள் அதிகரித்து வரும் குற்றங்கள், வெளி நாட்டு பங்களிப்பு (ஒழுங்கு முறை) திருத்தச் சட்ட மசோதா, 2026 (FCRA), தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026 ஆகிய முக்கியத் தலைப்புகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலத் தலை வர் மௌலவி ஏ. முஹம்மது ஹனீஃபா மன்பயீ பத்திரி கையாளர்களிடம் விரிவாக உரையாற்றினார். இந்நிகழ்வில்பங்கேற்றபத்திரிகையாளர்கள், தொலைக் காட்சி நிருபர்கள் மற்றும் யூடியூபர்கள் பல்வேறு முக்கி யமான பல கேள்விகளை முன்வைத்தனர். பின்னர் பத் திரிகையாளர்களின் கேள்விகளுக்கும் விரிவாக பதிலளித்தார்.

குறிப்பாக, ★ காவல் நிலையங்களில் நடைபெறும் படுகொலைகள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந் தின் கருத்து என்ன? ★ தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதற்கும், அவர்கள் எல்லை தாண்டியதாகக் கூறப்படுவதற்கும் முற்றுப்புள்ளி வைக்க என்ன நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்? ★ தவெக ஆட்சியில் மது மற்றும் போதை கட்டுப்படுத்தப்பட்டுள் ளதாகக் கூறப்படுகிறதே அது உண்மையா? ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் சார்பில் மது மற்றும் போதைக்கு எதி ரான பிரச்சாரப் பணிகள் தற்போது எவ்வாறு நடை பெற்று வருகின்றன? எதிர்காலத்தில் என்னென்ன திட் டங்கள் உள்ளன? FCRA திருத்தச் சட்டத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்ன? தேசிய கௌரவ அவமதிப்பு தடுப்பு (திருத்த) மசோதா, 2026 என்ன கூறு கிறது? கடந்த ஆட்சியிலும் மதுவிற்பனை இருந்தது தற்போதைய ஆட்சியிலும் தொடர்கிறது. மதுவுக்கு ஆத ரவான கொள்கையைக் கொண்ட கட்சிகளுடன் முஸ் லிம் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது குறித்து ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் நிலைப்பாடு என்ன? காவல்துறையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு போதிய அளவில் ஆட்கள் தேர்வு செய்யப்படாததால் காவலர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு உள்ளாவ தாக ஒரு காவலரே பேட்டி அளித்துள்ளார். இதுகுறித்து தங்களது கருத்து என்ன? என பல்வேறு முக்கியமான கேள்விகளை பத்திரிகையாளர்கள் முன்வைத்தனர். அவற்றிற்கு மாநிலத் தலைவர் மௌலவி ஏ.முஹம்மது ஹனீஃபா மன்பயீ விரிவான விளக்கங்களுடன் பதில ளித்தார். இந்நிகழ்வில் மாநிலத் துணைத் தலைவர்கள் டி.யூசுப் பாஷா, கே.எம். சிராஜ் அஹ்மத், மாநில ஆலோ சனைக் குழு உறுப்பினர்கள் டி.அஜீஸ் லுத்புல்லாஹ், வி.எஸ். முஹம்மது அமீன், எஸ்.என். சிக்கந்தர், மாநில அமைப்புச் செயலாளர்கே. ஜலாலுதீன், மாநில மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஜலால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், 30க்கும் மேற்பட்ட பத் திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிருபர்கள் மற்றும் யூடியூப் ஊடகவியலாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்ற னர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு மது போதைக்கு எதிரான "சமரசம்" சிறப்பிதழ், ஐஎஃப்டி, வெளியீடான "போதை அழிவின் பாதை" என்ற புத்தகம் வழங்கப்பட்டது. பத்திரிகையாளர்சந்திப்புநிகழ்ச்சியை ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்த் தமிழ்நாடு & புதுச்சேரி மாநிலஊடகச்செயலாளர்எஸ்.சாகுல்ஹமீது தொடங்கி வைத்து, நிகழ்வை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA